
# இறையாட்சி தேடல் - 2

## திருமறை



வெளியீடு:

யாழ்ப்பாண திருச்சபை திருப்பணி மன்றம்

2004

## பதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இறையாட்சித் தேடல் - திருமறை |
| ஆக்கம் | : | அருட்பணி S.D.P.செல்வன்<br>அருட்பணி அ.ஸ்ரீபன் |
| பதிப்பு | : | 11.04.2004 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர்கள் |
| வெளியீடு | : | யாழ்ப்பாண திருச்சபை திருப்பணி மன்றம் |
| அச்சகம் | : | ஒன்லைன் அச்சகம், வவுனியா. |


# வாருங்கள் தேடுவோம்:

வாழ்வு வியாபாரமாக்கப்படுகின்றது. காசு தான் கடவுள் என்பது சர்வதேச கீதமாகிவிட்டது. துப்பாக்கிகள் எம்மை ஆட்சி செய்கின்றன. எமது நாட்டில் போர் ஓய்வு பெற்றுக்கொண்டிருக்கிறது. வீதிகள், வீடுகள், ஆலயங்கள் பாடசாலைகள் போன்றவை புனரமைக்கப்பட்டு வருகின்றன. வசதியுள்ளவர்கள் கார்களுடனும், கணனிகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்க, போரினால் பாதிக்கப்பட்டு பலியான பலர் வயிற்றுப்பசி எப்படித் தீரப்போகிறது என கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். உலக மயமாக்கலின் தாக்கம் அனைவரையும் அழிவு நோக்கி அள்ளிக்கொண்டு போகிறது. இந்நிலையில் இயேசுவின் இறையாட்சி எங்கே? என நாம் தேட வேண்டும். இறையாட்சி விண்ணிலா? மண்ணிலா? எம்முள்ளத்திலா? எங்கே இயேசு அறிவித்த இறையாட்சி? நாம் துப்பாக்கிகளின் ஆட்சிக்கும் பணத்தின் ஆட்சிக்கும் உலக மயமாக்கலின் ஆட்சிக்கும் வாரிசுகளாகவும் ஆதரவாளர்களாகவும் வாழ முடியாது. இறையாட்சிக்காக இயேசுவோடு இணைந்து செயற்படும் காலம் வந்து விட்டது.

கடவுளது ஆட்சியின் விழுமியங்களின்படி வாழவும், கடவுளது ஆட்சியை தேடி உழைக்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதே எங்களது நோக்கம்.

*கடவுளது ஆட்சிப் பயணத்தில் கடவுளுடன் இணைந்து கொள்ளுவோம் வாருங்கள்.*
*இறுதி மூச்சு இருக்கும் வரை இறையாட்சியைத் தேடுவோம் வாருங்கள்!.*

இறைபணியில்
அருட்பணி S.D.P.செல்வன்
அருட்பணி அ.ஸ்ரீபன்

# இறையாட்சித் தேடல் - 2

## திருமறை (Bible)

### (1) கதைகள்

அ) ஒரு ஆலயப் பணியாளர் மக்களிடம் "நீங்கள் நகை போடக் கூடாது. இது கடவுளுக்கு பிரியமானதல்ல" (1பேதுரு 3:3)என்றார். சபையார் யாரும் இதற்கு செவிசாய்க்கவில்லை. திரும்பவும் மக்களிடம் "நீங்கள் உங்கள் நகைகளை என்னிடம் கொண்டுவந்து தாருங்கள், நான் பாதுகாப்பாக வைத்திருக்கிறேன். இவை உங்களிடம் இருப்பதால் தான் நீங்கள் அணிந்து கொண்டு வருகின்றீர்கள், என்னிடமிருக்கட்டும். உங்களிற்கு சோதனை ஏற்படாது. எல்லாரும் நகைகள் அணைத்தையும் கொண்டு வந்து தாருங்கள். யாராவது பொய் சொன்னால் அனனியா சப்பிராளுக்கு நடந்தது நடக்கும்" (திருத்தூதுவர் பணி 5) என்றார். சபையார் எல்லாரும் நகைகளை கொண்டு வந்து கொடுத்தனர். பணியாளரை இரண்டு கிழமைகளின் பின் காணவில்லை. நகைகளுடன் தலைமறைவாகிவிட்டார்.

**திருமறை வசனங்களை சுயநலத்துக்காக பாவிப்பது தவறு**

ஆ) வெள்ளையினத்தவர் கறுப்பு இனத்தவரிடம் வந்து, "நற்செய்தி அறிவிக்க வந்திருக்கின்றோம்'' என்றனர். வெள்ளையரிடம் திருமறை இருந்தது கறுப்பரிடம் நிலம் இருந்தது பிரார்த்தனையின் பின் பார்க்கும் போது, நிலம் வெள்ளையரிடம் இருந்தது. திருமறை கறுப்பரிடம் இருந்தது. - பேராயர் டெஸ்மன் டூட்டு.

**திருமறையைப் பாவித்து மேற்கத்தேய ஆதிக்கவாதிகள் தென் ஆபிரிக்க மக்களை ஒடுக்கினர். என்பது வரலாற்று உண்மை.**

இ) ஒருவர் காலையில் எழுந்து வேலைக்குப் போவதற்கு முன்னர் திருமறையை படிக்கச் சென்றார். அவர் கண்களை மூடியபடி திருமறையை திறந்தார். தனது கைவிரலினால் ஒரு குறித்த வசனத்தின் மீது கையை வைத்தார். கண்களைத் திறந்து பார்த்தா "யூதாஸ் நாண்டு கொண்டு செத்தான்." என்று காணப்பட்டது. இது எனக்கு பொருத்தமான வசனமாக இருக்காது என்று, திரும்பவும் திருமறையை மூடினார். கண்களை மூடி வேறு ஒரு பகுதியை எடுத்து வாசித்தார். அதில் "நீயும் போய் அப்படியே செய்" என்றிருந்தது. இதுவும் பொருத்தமானதல்ல என்று கூறி, திருமறையை மூடினார். கண்களை மூடி வேறு ஒரு பகுதியை எடுத்து வாசித்தார். அதில் "செய்வதை சீக்கிரம் செய்" என்றிருந்தது. திருமறையை மூடிவிட்டு வேலைக்கு வருத்தத்தோடு புறப்பட்டார்.

**கடவுளுக்கு எமது முட்டாள்தனம் அவசியமில்லை.**

## (2) திருமறை அடிப்படை

அ) மனிதகுலம் கடவுளோடு வாழ்ந்த வாழ்வை விசுவாசக் கண்ணோட்டத்தில் நோக்கி எழுதப்பட்டதே திருமறையாகும். இது குறித்தகாலத்தில் குறித்த சிந்தனை மட்டத்தில் வரையறைகட்கு உட்பட்டு எழுதப்பட்டஒன்றாகும்.


ஆ) மாற்கு 10:17-22.

நீதிச்சட்டம் மட்டும் வாழ்வு தராது. வாழ்வு இருப்பதை பகிரும் இறையாட்சி விழுமியத்தில் தங்கியுள்ளது என்பதை இப் பகுதி விளக்குகிறது. பணக்கார வாலிபனுக்கு நீதிச்சட்டம் தெரிந்திருந்தாலும் அவரால் கடவுளது ஆட்சிக்குள் போகமுடியவில்லை. எனவே கடவுளுடைய ஆட்சிக்குள் செல்வதற்கு திருமறை விழுமியங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்.

இ) எரேமியா 1:9-10.

கடவுளது வார்த்தை (திருமறை) எப்போதும் குறித்த நோக்கத்துடன் வழங்கப்படுகின்றது. கடவுள் எரேமியாவுக்கு தனது வார்த்தையைக் கொடுப்பதன் மூலம் செயற்பட அழைக்கிறார்.

"இதோ பார், என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும், இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன். கடவுளின் வார்த்தை மூலம் மக்கள் தீமையை விட்டு நன்மையை நோக்கி வரவேண்டும்" என்பதில் கடவுள் தெளிவாக இருக்கின்றார்.



## (3) நாம் வாழும் யதார்த்தநிலை

1) சிலர் திருமறையை தலையணையின் கீழ் வைத்து உறங்குகின்றனர். இவர்களின் கருத்துப்படி தீய கனவுகள் திருமறையை வைத்து உறங்கும் போது ஏற்படுவதில்லை என்பதாகும்.

2) சிலர் தம் சுயவிருப்பத்தை நியாயப்படுத்த திருமறையை பாவிக்கின்றனர்.

**உதாரணமாக:-** சாதி பார்த்து திருமணம் செய்ய வேண்டும் என நினைக்கும் ஒருவர் ஈசாக்குக்கு ஆபிரகாம் பெண் தேடியது அவரது இனத்தாரிடம் தான் என்பதை கூறி நான் சாதி பார்ப்பது சரி என்கின்றார்.

3) சிலர் திருமறையை சோதிடப் புத்தகங்களாக பார்க்கின்றனர். போர் பற்றிய செய்தியை கேட்கும் போது எனது வருகை நெருங்கி விட்டது (மாற்கு 13:7-26) என இயேசு கூறியபடியால் போர் நடக்கும் போது போரின் கொடுமை பற்றி கதைத்து போர் வேண்டாம், என போராடுவதை விட போர் கடவுளின் வருகைக்கு அடையாளம் என கூறி திருப்தியடைகின்றனர்.

4) அடிமைத்தனங்களை நியாயப்படுத்த சிலர் திருமறையைப் பாவிக்கின்றனர்.

**1. பெண் குருத்துவம்**

பெண்கள் முக்காடிட வேண்டும். பெண்களைவிட ஆண்களே முக்கியம் (1 கொரிந்தியர் 11:2-16) பெண்கள் ஆண்களுக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும். (எபேசியர் 5:21-33) பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

(தீமோத்தேயு 2:12-15) போன்ற அடிமைத்தன சிந்தனைகளைக் கூறி பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்துகின்றனர். ஆனால் இவர்கள் சமத்துவம் கூறும் பகுதிகளை (கலாத்தியர் 3:28, தொடக்க நூல் 1:27) மனதிற் கொள்வதில்லை.

**2. ஏனைய சமயங்களுக்கு இரட்சிப்பு இல்லை.**

இச் சிந்தனை மூலம் ஏனைய சமயத்தவர்கள் மீட்புப் பெறமாட்டார்கள் என கூற பின்வரும் வசனத்தை பாவிக்கின்றனர். "இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ் மனிதரிடையே இவரது பெயரின்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை." (திருத்தூதுவர் பணி 4:12) இவர்கள் உரோமையர் 2:14,15 திருவெளிப்பாடு 21:1-3, 24 போன்றவற்றைக் கவனிப்பதில்லை.



## (4) சிந்தனைகள்.

அ) **திருமறை ஒடுக்கு முறையின் நூல் அல்ல, விடுதலையின் நூல். திருமறை விடுதலையின் நூல்,** வாழ்வுதரும் நூல். எனினும் வரலாற்றில் **ஒடுக்கு முறைக்குப்** பாவிக்கப்பட்டிருப்பதை காண முடிகிறது.

**உதாரணம்: 1. கறுப்பு இனமக்களின் அடிமை வாழ்வு.**

நோவாவுடைய நிர்வாணத்தை பார்த்தபடியால் காம் சபிக்கப்பட்டவனாக கருதப்பட்டான். நோவா கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரருக்கு அவன் அடிமையிலும் அடிமையாக இருப்பான். (தொடக்க நூல் 9:25) என்றார் காமின் வழிவந்தோரே கறுப்பர் என்ற சிந்தனையை முன்வைத்து வெள்ளையர்கள் கறுப்பு இன மக்களை அடிமைப்படுத்தினர்.

**உதாரணம்: 2. பெண்ணடிமைத்தனம்.**

பெண்கள் ஆண்களிலும் குறைந்தவர்கள் (1 கொரிந்தியர் 11:2-16, எபேசியர் 5:21-33, 1 தீமோத்தேயு 2:12-15) எனவே பெண்களுக்கு குருத்துவம் உரியதல்ல என பலர் பெண்குருத்துவத்தை எதிர்த்தனர். இன்றும் எதிர்த்து வருகின்றனர்.

எல்லாரும் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள் எனவே நிறம், இனம், மொழி, பால், ரீதியில் எவரையும் ஒடுக்குவது திருமறைக்கு எதிரான சிந்தனையாகும். பெண்களை குருத்துவத்திற்கும் ஏனைய திருச்சபை செயற்பாடுகளிற்கும் இணைத்துக்கொள்ள மறுப்பது, மனித உரிமை மீறல் அடிப்படையில் குற்றத்துக்குரிய ஒன்றாகும். கடவுள் ஒரு ஆணை அழைத்தால் "இறையழைப்பு" எனக் கூறி வரவேற்கின்றோம். பெண்ணுக்கு அழைப்பு வரும் போது "கடவுள் உன்னை அழைக்கமாட்டார்" எனக்கூறுவது நீயாயத்துக்கு பொருந்தாத ஒன்றாகும்.

மாதவிடாய் பெண்களிற்கு ஏற்படுவதால் தூய்மையற்றவர்கள் என்று கூறி பலிபீடத்துக்குள் வருவது தவறு என சிலர்

நினைக்கின்றனர். ஆனால் லேவியர் 15 இன்படி விந்து வெளியேறலும் மாதவிடாயும் ஒரே நோக்கில் நோக்கப்படுகின்றது. எனவே தூய்மையை இயேசுவின் சிந்தனைப்படி நோக்க வேண்டும்.

"மனித உள்ளத்திலிருந்தே பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம்,காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றை செய்யத்தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன. தீயவையாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரை தீட்டுப்படுத்து-கின்றன", என்றார் இயேசு. (மாற்கு 7:22,23) எனவே மாதவிடாய் பெண்கள் குருத்துவத்தில் இணையத்தடையல்ல.

பவுல் ஒரு ஆணாதிக்க வாதி. பவுலின் சிந்தனைகளை இயேசுவின் சிந்தனைகளைக் கொண்டே அணுகவேண்டும். இயேசு ஆணும் பெண்ணும் சமம் என (தொடக்க நூல் 1:27, மாற்கு 10:1-12) சிந்திக்க, பவுல் பெண்ணடிமைத்தனத்தை நியாயப்படுத்தப் பார்க்கின்றார். (1கொரிந்தியர் 11:2-16, தொடக்கநூல் 2:21,22 ) அத்துடன் பவுலுடைய சிந்தனைகளுக்குள் முரண்பாட்டைக் காணலாம். பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்தும் பவுல் கலாத்தியர் 3:28 இல் "ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்", என்று சமத்துவம் கதைக்கின்றார். அத்துடன் பவுல் உடைய ஒவ்வொரு கடிதங்களும் குறிப்பிட்ட சூழ்நிலைக்கு மட்டுமே பொருத்தம். எனவே பவுலின் ஒரு கடிதத்திலுள்ள குறித்த சிந்தனையை பொதுச்சிந்தனையாக காட்டக்கூடாது.

•

**உதாரணம்:-** கொரிந்து நகரில் முக்காடு போடாத பெண்கள் விபச்சாரிகள் மட்டுமே என்ற சூழ்நிலையில் தான் பவுல் கிறிஸ்தவப் பெண்களை முக்காடு இடும்படி கூறுகின்றார். இவர்கள் முக்காடு போடாவிட்டால் வீதியில் வரும் ஒருவர் இவர்களை விபச்சாரத்துக்கு அழைக்கும் அபாயம் இருந்தது. எனவே தான் கிறிஸ்துவுக்குள் இப்பெண்கள் விடுதலை பெற்றவர்கள் என்றாலும், முக்காடு அணியும்படி கூறினார். எந்த அடிப்படையிலும் பெண்ணடிமைத்தனம் நியாயப்படுத்தப்படக்கூடிய ஒன்றல்ல என்பது தெளிவு.

**உதாரணம்: 3. அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.**
(உரோமையர் 13:1-7)

இப்பகுதி ஐரோப்பிய அதிக்கவாதிகளால் ஒடுக்கு முறைக்குப் பாவிக்கப்பட்ட பகுதியாகும். "ஆளும் அதிகாரம் உள்ளவர்களுக்கு எல்லாரும் பணிந்திருங்கள். ஏனெனில் கடவுளிடமிருந்து வராத அதிகாரம் எதுவும் இல்லை. இப்பொழுதுள்ள ஆட்சிப் பொறுப்புகளைக் கடவுளே ஏற்படுத்தினார். ஆகையால் அதிகாரத்தை எதிர்த்து நிற்போர் கடவுளின் ஏற்பாட்டையே எதிர்த்து நிற்கின்றனர். அவ்வாறு எதிர்ப்பவர்கள் தங்கள் மீது தண்டனைத்தீர்ப்பைத் தாங்களே வருவித்துக் கொள்கிறார்கள்" (உரோமையர் 13:1,2 )

**ஒடுக்கு முறை** அதிகாரத்தை எதிர்க்கக் கூடாது என இயேசு கூறமாட்டார். அவர் ஏரோதை "நரி" என்று வெளிப்படையாகவே கண்டித்தார் (லூக்கா 13:32 ) எனவே பவுலின் சிந்தனையை விட இயேசுவின் சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்து தீய ஆட்சிக்கு எதிராக போராடுவது எமது கடமையாகும். பவுல் உரோம அரசு தம்மை அரச எதிர்ப்புக்குழுவாக பார்க்கக்கூடாது எனும் எண்ணத்திலேயே இருந்தார். நற்செய்திப் பணிக்கு எந்த தடையும் வரக்கூடாது என்பதற்காகவே **சந்தர்ப்பவாதியாக** செயற்பட்டார். என நாம் பவுலைப்புரிந்து கொண்டு இயேசுவின் வழி நடக்க வேண்டும்.

**(ஆ) இயேசு திருமறையை பாவித்தமுறை.**

நாம் கடவுளைக்குறித்து சிந்திக்கின்ற போது திருமறை, காரணம், மரபுகள், சூழ்நிலை, என்பவற்றை அடிப்படையாக கொண்டு நோக்க வேண்டும் என்பது முக்கியம். இயேசு எப்படி திருமறையைப் பாவித்தார் என நோக்கும் போது பின்வருவனவற்றை முன்வைக்கலாம்.

**1. நிராகரித்தல்.**
இயேசு சில வசனங்களை நிராகரிக்கின்றார். வாழ்வு தராத வசனங்களை முழுமையாக நிராகரிக்கின்றார்.

**உ+ம்: (1) லூக்கா 11:42.** ஐயோ! பரிசேயரே உங்களுக்கு கேடு, நீங்கள் புதினா, கறியிலை, மற்றும் கீரைச்செடி வகைகள் எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பங்கைக் காணிக்கையாகப் படைக்கிறீர்கள். ஆனால் நீதியையும் கடவுளின் அன்பையும் பொருட்படுத்துவதில்லை.

**உ+ம்: (2) லூக்கா 4:18,19, ஏசாயா 61:1,2.**
அநீதிக்கு பழிவாங்கும் நாளை அறிவிக்கவும், என காணப்படும் பகுதியை இயேசு தவிர்த்து ஏனையவற்றை வாசித்தார். எனவே வாழ்வு தராத திருமறைப்பகுதியை இயேசு நிராகரித்தார்.

**உ+ம்: (3) பொருத்திப்பார்த்தல்**
இயேசு தனது திருப்பணியை திருமறையுடன் பொருத்திப்பார்த்தார். துன்புறும் தொண்டன் சிந்தனையினை தனக்கு பொருத்தமாக்கிக் கொண்டார். (ஏசாயா 53) சிலர் பழைய ஏற்பாட்டில் கூறியது புதிய ஏற்பாட்டில் நடைபெறுகிறது என திருமறையை சாத்திரப்புத்தகமாக நோக்க விளைகின்றனர். ஆனால் பழைய ஏற்பாட்டு சிந்தனைகள் அக்காலத்துக்குரியவை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அத்துடன் பழைய எற்பாடு யூதர்களின் திருமறை என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

**3. புதிய அர்த்தம் கொடுத்தார்.**

இயேசு திருறைப்பகுதிகளிற்கு புதிய அர்த்தம் கொடுத்தார். திருச்சட்டங்கள், செயல் மூலம் மட்டுமல்ல, செயலுக்கு காரணமான சிந்தனை அடிப்படையிலேயே நோக்கப்பட வேண்டும் என இயேசு தெளிவாக இருந்தார்.

**உ+ம்: (1)** கொலை செய்யாதே (விடுதலை பயணம் 20:13) எனும் கட்டளைக்கு புதிய அர்த்தம் கொடுக்கும் இயேசு, "முட்டாளே" என கூறுவதே கொலையின் அடிப்படை என்கின்றார். (மத்தேயு 5:21-26)

**உ+ம்: (2)** விபசாரம் செய்யாதே (விடுதலை பயணம் 20:14) எனும் கட்டளைக்கு புதிய அர்த்தம் கொடுக்கும் இயேசு "ஒருவரோடு உடலுறவு கொள்ளலாமா என ஒருவர் நினைப்பதே

விபசாரம்" என்றார். (மத்தேயு 5:27-32)

4. **நல் வாழ்வுக்காக தெரிந்தெடுத்து விளக்கினார்.**
திருமறையில் பல பகுதிகள் இருப்பினும் வாழ்வுதரும் சிந்தனையை முன்வைக்க சில பகுதிகளை தெரிந்தெடுத்துக் கூறினார்.
**உ+ம்: (1)**:- மத்தேயு 12:1-8.

ஓய்வு நாளில் வேலை செய்வது தவறு என்றால், தாவீது தூய அப்பத்தை சாப்பிட்டது சரியா? (மத்தேயு 12:3,4 1சாமுவேல் 21:1-4 லேவி 24:9)
**உ+ம்: (2)** கடவுள் பலியை விரும்புபவர் அல்ல. இரக்கமே முக்கியம். (மத்தேயு 12:7, சாமுவேல் 15:22 ஓசேயா 6:6)

எனவே நாம் இயேசுவின் விருப்பப்படி திருமறையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## (5) செயற்பாடு

திருமறை விடுதலையின் புத்தகம் என்பது பற்றி குழுவாக ஆய்வு செய்து சுவரொட்டி வரைக?

## (6) கேள்விகள்

1. திருமறை என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது என்ன?
2. திருமறை எப்படிப் பாவிக்கப்பட வேண்டும் என நீர் நினைக்கிறீர்?
3. இறையாட்சியை விளக்குவதற்கு திருமறை தரும் சிந்தனைகள் எவை?

இறையாட்சித் தேடல் - 1
**பற்றுறுதி, விசுவாசம், நம்பிக்கை**

இறையாட்சித் தேடல் - 2
**திருமறை**

இறையாட்சித் தேடல் - 3
**திருப்பணி**

இறையாட்சித் தேடல் - 4
**அதிகாரம்**

இறையாட்சித் தேடல் - 5
**சூழ்நிலைமயமாதல்**

இறையாட்சித் தேடல் - 6
**வறுமை**

இறையாட்சித் தேடல் - 7
**துன்பம்**

இறையாட்சித் தேடல் - 8
**நீதி, சமாதானம், ஒப்புரவாக்கல்**

இறையாட்சித் தேடல் - 9
**திருச்சபை ஒருமைப்பாடு**

இறையாட்சித் தேடல் - 10
**பிறமதங்களுடனான ஐக்கியம்**

On Line Printers, Vavuniya. T.P: 024-2222839